13 DEC 1965
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 7th August 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Hon. Member Sri M. Kalyanasundaram.

மெரைன் டீசல் என்ஜின் திட்டம்

*கு. கா. கேள்வி 1.—திரு. மீ. கலியாணசுந்தரம் : }
திரு. சா. கணேசன் : } கனம்
கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த மெரைன் டீசல் என்ஜின் திட்டத்தை எண்ணூரில் நிறைவேற்றாமல் வேறு எங்காவது நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்து நிலவுவதை அரசாங்கம் அறியுமா ?

(இ) இல்லையானால், எண்ணூரில் அத்திட்டத்தைத் துவக்குவதில் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

(உ) இத்திட்டத்தின் தற்போதைய நிலை பற்றிய விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government have no official intimation regarding any such move.

(*b*) & (*c*) As this is a Central Sector Project, it is for the Government of India to come to a decision. This Government have not been informed of any reasons for the delay. So far as this State is concerned, we have at the request of the Government of India agreed to place at their disposal the lands required for the project free of cost. The site selected by Ministry of Defence is near Ennore. The total area of land required is about 200 acres. This comprises Patta lands, Poramboke lands and Railway and Port-trust lands. The Patta lands and a portion of poramboke lands have already been handed over to the Government of India authorities.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் திட்டத்தின் முழு விவரங்களையும் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு இந்த ராஜ்ய சர்க்காருடைய அனுமதியையும் அதற்கான வசதிகளையும் பெற்றுத்தான் ஒரு திட்டம் ராஜ்யத்திலே ஏற்படும் என்று இருக்

இன்றபொழுது சம்பந்தப்பட்ட ராஜ்ய சர்க்காரை கலந்தாலோசிக்க வேண்டுமென்ற பழக்கம் உண்டா இல்லையா? இல்லை என்றால் ஏன் அப்படிச் செய்யப்படவில்லை? இதைப்பற்றி உத்தியோகப் பூர்வமான தகவல்கள் இல்லாவிட்டாலும் கூட மத்திய அரசாங்கத்திற்கு இதைப்பற்றி கடிதம் எழுதினர்களா, இதற்கு ஆட்சேபணை ஏதாவது தெரிவித்தார்களா, என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தத் திட்டம் படகுகள் ஓட்டுகின்ற என்ஜின் செய்கின்ற திட்டம். இதை நிறுவுவதற்காக 1962-ல் அப்பொழுதிருந்த டிஃபென்ஸ் மினிஸ்டர் ஸ்ரீ கிருஷ்ண மேனன் அவர்கள் சென்னை ராஜ்யத்திலே இதற்கு நிலம் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். நாங்கள் அப்பொழுது என்ன என்ன நிலங்களைக் கொடுக்கமுடியும் என்று காண்பித்தோம். அவரும், முன்பு முதலமைச்சர் ஆக இருந்த திரு. காமராஜர் அவர்களும் அங்கு சென்று எண்ணூரில் உள்ள நிலத்தைப் பார்வையிட்டார்கள். அதற்குப் பிறகு டிபென்ஸ் மினிஸ்ட்ரியிலிருந்து சாயில் முதலியவைகள் எல்லாம் எப்படியிருக்கின்றன என்ற தகவல்களையெல்லாம் கேட்டார்கள். அதற்கும் சாயில் டெஸ்ட் முதலியவைகள் செய்து நாம் அங்கே அனுப்பினேம். அதற்குப் பின்னர் அவர்கள் 200 ஏக்கர் நிலம் மெரெய்ன் டீசல் என்ஜின் திட்டம் ஏற்படுத்துவதற்காக கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக நாம் அதன் மேல் நடவடிக்கையெடுத்துக் கொண்டு 70 ஏக்கர் நிலம் கொடுத்து விட்டோம். இன்னும் 100 ஏக்கர் நிலம் வரையில் கையில் தயாராக வைத்திருக்கிறேம். இந்தத் திட்டம் சென்னையிலிருந்து மாற்றப்படும் என்று பத்திரிகையில் தான் செய்தி வந்தது. ஆனல், சர்க்காருக்கு இதைப் பற்றி அதிகார பூர்வமான இன்ஃபர்மேஷன் கிடையாது. பத்திரிகையில் வந்த செய்தி எந்த அளவுக்கு உண்மை என்பது தெரியாது. கால தாமதம் ஆகிறது என்று சொல்லி கடந்த ஒரு வருஷ காலமாக மத்திய சர்க்காருக்கு நாம் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேம் இந்த ராஜ்ய சர்க்காரின் ஹை லெவலிலிருந்து எழுதியிருக்கிறேம். இந்தத் திட்டத்திற்கான இடம் மாற்றப்படும் என்ற விவரம் எங்களுக்கு கொடுக்கப்படவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், கனம் அமைச்சர் அவர்கள் கூறிய விவரங்களிலிருந்து இந்தத் திட்டத்திற்கான பூர்வாங்க வேலைகள் எல்லாமே முடிந்து விட்டதாகத் தெரிகிறது. பழிவாங்கப்பட்டது முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ கிருஷ்ண மேனன் அவர்கள் மட்டுமல்லாமல் அவர்கள் மேற்கொண்ட வேலைகளும் பழிவாங்கப்பட்டனவா? தங்களுடைய ராஜ்யத்திற்குத் திட்டங்கள் வேண்மென்ற ஆவலினலே அமைச்சர்கள் மாறும் பொழுது திட்டங்களும் மாறுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கேள்வியை பார்லிமென்டிலே போட்டால் உபயோகமாக இருக்கும்.

7th August 1965]

திரு. சா. கணேசன் : இந்தக் கேள்வியை நானும் கொடுத்திருக்கிறேன். மன்னிக்கவேண்டும், கனம் சபாநாயகர் அவர்கள் என்னுடைய பெயரைச் சொல்லவில்லை. இதை நான் குறை சொல்வதற்காகச் சொல்ல இல்லை.

கனம் சபாநாயகர் : ஒரு கேள்வியை நான்கு ஐந்து பேர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லோருடைய பெயரையும் நான் சொல்வதில்லை.

திரு. சா. கணேசன்: முன்னால் கொடுத்தவர்களுடைய பெயர் முன்னால் வரும். பின்னால் கொடுத்தவர்களுடைய பெயர் பின்னால்தான் வரும். ஆனால் சில சமயங்களில் மாறி வருகிறது. இது எங்கள் போன்றவர்களுக்கு விரும்பத்தக்கது அல்ல.

MR. SPEAKER : Even though more than one hon. Member has given notice of a question, usually only one of them is called to put the question. If the hon. Members want, I have no objection to mention the names of all the hon. Members who have given notice of the question.

திரு. சா. கணேசன் : மத்திய ஆட்சியில் அமைச்சர்கள் மாறுகின்றபோழுது திட்டங்களுடைய நிலைமைகளும் மாறிக்கொண்டு வருகின்றன என்று நம் மாநிலத்தில் ஒரு பரவலான கருத்து இருக்கின்றது. பிற துறைகளிலும் இதுபோன்ற கருத்து நிலவி வருகிறது. அமைச்சர் அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தி எவ்வளவு தூரம் சரி அல்லது தவறு என்று தங்களுக்குத் தெரியாது என்று குறிப்பிட்டார்கள். பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு அதனுடைய உண்மை நிலைமை என்ன என்பதை சர்க்கார் மத்திய ஆட்சியோடு கலந்து தெளிவு கொள்ள முயன்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே சொன்னேன். ஒரு ஆண்டு காலமாக இது பற்றி நாம் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம். பத்திரிகைகளிலே செய்தி வந்ததே, இதற்கு அடிப்படை என்ன என்றும் கேட்டிருக்கிறோம். அது தவிர டெல்லிக்குச் சென்றிருந்தபோதுகூட சம்பந்தப்பட்டவர்களிடம் இது பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்தத் திட்டம் முடிவடைந்தது என்று நினைக்கிறேன். நேற்று எனக்குக் கிடைத்த ' இந்தியா டுமாரோ ' என்ற புத்தகத்தில் சொல்லியிருப்பதைப் படிக்கிறேன்.

On page 239 of the book, " ' India Tomorrow '—Pattern of Indo-German Future ", it is stated as follows :—

" M.A.N. engines are installed in more than fifty locomotives operated by the Central Railways. The Bombay Port Trust Co., and other leading Indian enterprises are also large-scale users of these prime movers. In 1962, an agreement was concluded with the Indian Government, to permit M.A.N. diesels to be

[7th August 1965

manufactured under licence, for marine engineering applications in particular. A plant for this purpose is to be erected at Ennore, in Madras State, and it is scheduled for commissioning early in 1965 ''.

திரு. சா. கணேசன் : 'இந்தியா டுமாரோ' என்ற புத்தகத்திலே இந்தமாதிரியான செய்தி கொடுத்திருப்பதாலே இந்த டீசல் எஞ்சின்கள் தயாரிக்கும் திட்டம் எண்ணூரில்தான் என்று முடிவாகி விட்டது என்று உறுதியாக நம்பலாமா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் உறுதியாகத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன். பத்திரிகைகளில் வேறுவிதமாகச் செய்தி வந்திருக்கிறது. அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதி இருக்கிறோம் என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதுமட்டுமல்லாமல் சேலம் உருக்காலைத் திட்டத்தையும் உறுதியாகத்தான் நம்பிக் கொண்டிருந்தோம். அதற்கு எவ்வளவு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது அல்லது ஏற்பட்டது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதையும் ஒப்பந்தம் செய்து விட்டு இப்படி மாற்ற இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களும் அறிந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். காலதாமதம் ஏற்பட்டது குறித்தாவது எழுதியிருக்கிறார்கள். காலதாமதப்படுவதே இதற்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தைக் கொடுக்கிறது. நம்முடைய மாநிலத்திலிருந்து எழுதிய கடிதத்திற்கு என்ன பதில் கிடைத்தது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பதில் 'எண்ணூரில் இல்லை' என்று கிடைக்கவில்லை.

திரு. வை. சங்கரன் : இந்தமாதிரி சில திட்டங்கள் கேளிடப்படும்போது முதலிலே செய்திகள் உத்தியோகபூர்வமற்ற செய்திகளாக வருகின்றன. பின்னர் அவை உத்தியோகபூர்வமாக ஆகி விடுகின்றன. ஆகவே, குதிரை போன பின்னால் கதவைப் பூட்டும் நிலைமை இல்லாமல், உத்தியோகபூர்வமற்ற செய்தி வரும்போதே உடனடியாக அதிலே அக்கறை செலுத்தி நம்முடைய ராஜ்யத்திலேயே அது ஆரம்பிக்கப்படுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு வருஷத்திற்கு முன்னால் இருந்தே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தத் திட்டத்திற்குத் தேவையான 200 எக்கர் நிலத்தில் 76 ஏக்கர்தான் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாக்கியிருக்கும் நிலங்களையும் ஒப்படைக்க வேண்டுமென்று ராணுவ அதிகாரி கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த பாக்கி நிலங்கள் ஏன் இதுவரை ஒப்படைக்கப் படவில்லை ?

7th August 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த நிலங்களிலே தண்ணீர் இருக்கிறது. அதை ரயில்வே இலாகா உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரயில்வேக்கு வேறு நிலத்தைப் பார்த்து கொடுத்து விட்டு இந்த நிலங்கள் ஒப்படைக்கப்படும். இந்த நிலங்கள் ஒப்படைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையோ, குறையையோ யாரும் கூறவில்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்தத் திட்டம் மத்திய சர்க்காரால் ஆரம்பிக்கப்படவில்லையென்றால்கூட மாகாண சர்க்காரால் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் உறுதி செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டம் 'எண்ணூரில் இல்லை என்று பதில் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது பொது மக்களுக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும் ஐயப்பாட்டைக் கொடுக்கிற ஒன்றாகும். அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் இதைப் பற்றி ஐயம் உண்டா அல்லது உறுதி உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். எங்களுக்கு அதிகாரபூர்வமாக எந்தவிதமான மாறுதல் செய்வதாகவும் தகவல் வரவில்லை. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றோம்.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையில் இந்தத் திட்டம் 1965-ம் ஆண்டுத் துவக்கத்தில் தொடங்கப்படும் என்று இருக்கிறது. 1965-ம் ஆண்டு ஆரம்பித்து பாதி ஆண்டைக் கூடக் கடந்து விட்டோம். இப்போதும் அந்தத் திட்டம் சந்தேகத்திற்குரிய நிலையில்தான் இருக்கிறது. இந்தத் திட்டம் மத்திய சர்க்காருடைய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை தனியாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. 'ஸ்பில்-ஓவர்' ஸ்கீம் என்ற முறையிலே இது எடுத்துக்கொள்ளப்படும்.

Sri V. KRISHNAMOORTHI : Sir, the Hon. Minister said that the Government of Madras have been writing letters to the Government of India regarding this particular industry for the past one year. So, there seems to be sounding fishy in the matter. May I know why the Government should not look into the matter and get the scheme to Madras even in the early stages before it is being published in the Press?

The Hon. Sri R. VENKATARAMAN : I do not understand the question. This question relates to marine diesel engines and

has nothing to do with "fish". The point here is that this Government have been taking all the appropriate steps right from the beginning.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரங்களின்படி இந்தத் தொழிற்சாலை 1965-வது ஆண்டு ஆரம்பத்தில் உற்பத்தி தொடங்கி இருக்க வேண்டிய திட்டம். இப்போது வருஷ இறுதி நெருங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் 'இது எண்ணூரில் இல்லை' என்று பதில் வரவில்லை என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அந்தமாதிரிப் பதில் இல்லாமல் இருப்பதிலேயே திருப்தி அடைகிறார்களா? தமிழில் ஒரு பழமொழி உண்டு. 'பின்னை என்பதும் பேசாமல் இருப்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்' என்று சொல்வது உண்டு. 'வைசாக்' பக்கத்தில் இதை நிறுவலாம் என்று பரிசீலித்து வருவதாகத் தகவல் இருக்கிறது. அதைப் பற்றி ஏதாவது விவரம் இருந்தால் அது என்ன என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது கேட்கப்படுகிற கேள்விகள் எல்லாம் மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டிய கேள்விகள்போல் தோன்றுகின்றன. இந்த ராஜ்ய சர்க்கார் இதைப் பற்றிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை வேறு இடத்திற்கு மாற்ற உத்தேசம் இருப்பதாக இந்த மாநில சர்க்காருக்கு தகவல் இல்லை.

திரு. சா. கணேசன்: இந்த மாநில அமைச்சு மத்திய சர்க்காரிடத்தில் 'இந்தியா டுமாரோ'வில் கண்டிருக்கிற பிரகாரம் இந்த ஆண்டுக்குள்ளேயாவது வேலையை தொடங்க இருக்கிறார்களா, அதற்கு நாம் என்ன செய்யவேண்டும், ஏதாவது செய்ய வேண்டுமா என்பது போல் அணுகுவதற்கு, ஒரு உற்சாகம் கொடுப்பது போன்று லெட்டர் எழுதி அதன் மூலம் செயலை விரைவுபடுத்தும் உத்தேசம் உண்டா? அப்படிச் செய்ய முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைப்பற்றி பத்துப் பதினைந்து கடிதங்கள் எழுதியாகிவிட்டது. இந்தப் புத்தகம் நேற்றுதான் கிடைத்தது. இதிலே எழுதியிருப்பதையும் குறிப்பிட்டு நம்முடைய ராஜ்ய சர்க்கார் நிச்சயமாகக் கடிதம் எழுதும்.

மேம்பாலங்கள்

*75 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி-தஞ்சாவூர் சாலையில், அரியமங்கலம், திருவெறும்பூர் ஆகிய ஊர்களில் உள்ள சாலை-இருப்புப்பாதை சந்திப்புகளில் மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்?